1970 மார்ச் 11]

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, அந்தப் பூமியிலே இப்பொழுது குளம் கட்டியாகிவிட்டது. அதற்கு அரசாங்கத்திற்கு நன்றி தெரிவிக்கிறோம்.

Panchayat Elections

* 326 *Q.*—T[IRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether the Government have postponed the Panchayat Elections in this State ; and

(*b*) if so, for what reasons ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஆம்.

(இ) ஊராட்சி வாக்காளர் பட்டியல் ஒன்றைத் தனியே தயாரித்து அச்சிட்டு வெளியிடுவதற்கும், கன்னியாகுமரி மாவட்டத்திலும் திருநெல்வேலி மாவட்டம் செங்கோட்டை வட்டத்திலும் உள்ள ஊராட்சிகளைச் சீரமைத்து, சிறு பிரிவுகளாக மீண்டும் தொகுப்பதற்கும் இயலும்படிச் செய்வதற்காக 1970-ம் ஆண்டின் தொடக்கத்தில் ஊராட்சிகளுக்கு நடக்க வேண்டிய சாதாரணத் தேர்தல்களைச் சில மாதங்கள் ஒத்திப்போட அரசு முடிவு செய்துள்ளது.

திரு. கே. விநாயகம் : அப்படி ஒத்திப்போடப்பட்ட தேர்தல் இறுதியாக எப்பொழுது நடக்கும்? இன்னும் பல பஞ்சாயத்துக்கள் தாங்கள் பிரிந்து போக வேண்டுமென்று மனுக்களை அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்களே, அவைகளைப்பற்றி இறுதியான முடிவை அரசாங்கம் எடுத்துவிட்டதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, இந்தத் தேர்தல்கள் ஜூலை மாதத்தில் கடைசி வாரத்திற்குள்ளாக நடத்தி முடிக்க வேண்டுமென்று அதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஊராட்சி மன்றங்களைப் பிரிப்பது சம்பந்தமான காரியங்கள் அநேகமாக முடிவுற்ற நிலையில் இருக்கின்றன. மேற்கொண்டும் புதிதாக ஊராட்சிகளைப் பிரிப்பதுபற்றிய தகவல்களை இனிமேலும் அனுப்பினால் காலதாமதம் ஆகும் என்பதால், தேர்தலுக்கு முன்னால் அனுப்ப வேண்டாமென்று எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கன்னியாகுமரி ஜில்லாவிலே, குறிப்பாக இந்தப் பஞ்சாயத்து சீரமைப்பு பற்றி பல ஆட்சேபனைகள் தெரிவித்து விண்ணப்பங்கள் அனுப்பியிருக்கிறார்களா ? அவற்றை அரசாங்கம் பரிசீலிப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, எற்கெனவே, மாவட்ட ஆட்சித் தலைவர் அங்கே இருக்கிற மாவட்ட அபிவிருத்தி மன்றத்தைக் கூட்டி, அதனுடைய கருத்துக்களைக்

கேட்டறிந்து திட்டங்கள் அனுப்பியிருக்கிறார்கள். அவைகளிலே பலபல மாறுபாடுகளைச் செய்ய வேண்டுமென்று உறுப்பினர்கள் கேட்டிருக்கிறார்கள். அவைகள் பரிசீலிக்கப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்பொழுது, அவைகள் அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்பது அல்ல.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கன்னியாகுமரி ஜில்லாவிலே மாவட்ட அபிவிருத்தி மன்றத்திலே இது சரியாகப் பரிசீலிக்கப் பட்டதா ? அங்கத்தினர்கள் வெளிநடப்புச் செய்தார்கள், அதைப் பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஏற்கெனவே அங்கத்தினர்கள் அத்தனைபேரும் ஏகமனதாக ஒரு தீர்மானத்தை இந்த அரசாங்கத்திற்கு முதலாவதாக அனுப்பினார்கள். பின்னால் அவர்கள் கருத்தை மாற்றிக் கொண்டு ஒருவேளை வெளிநடப்பு செய்திருக்கலாம். அதைப்பற்றிப் புகார்கள் நமக்கு எதுவும் நேரடியாக வரவில்லை.

திரு. கோ. கருணைநாதன் : ஊராட்சி மன்றத் தேர்தலில் மாற்றம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : அடுத்த கேள்வி அதன் தொடர்புடையது. ஊராட்சி மன்றத்திற்கான தலைவர் தேர்தலை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையைப் பின்பற்ற அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது. அதற்கான சட்ட திருத்தம் விரைவில் வரும்.

* 327 *Q*.—Thiru **K. VINAYAKAM : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—**

(*a*) whether the Government proposes to simplify the procedures relating to Panchayat and Panchayat Union Elections; and

(*b*) if so, what those new proposals are ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) ஊராட்சி மன்றத் தலைவரை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கும் முறையினைத் தவிர, நடைமுறை மாற்றம் எதுவும் செய்யும் செயற்குறிப்பு இல்லை.

(இ) இவ் வினா எழவில்லை.

திரு. கே. விநாயகம் : அப்படி ஊராட்சிமன்றத் தலைவர் தேர்தல் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால் அதை இலாகா ஆர்டர் மூலமாகப் போட முடியாது. அதற்குத் தகுந்த மசோதா வர வேண்டுமென்று விதியிருக்கிறது. அந்த மசோதாவை நாமெல்லாம் கலைந்து போவதற்குள்ளாகக் கொண்டு வருவார்களா ? அல்லது வேறு எப்பொழுதாவது சட்டசபையைக் கூட்டி அப்பொழுது கொண்டுவரப் போகிறார்களா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவரவர்களே, ஊராட்சி மன்றத்தினுடைய சட்டதிட்ட விதிகளை மாற்றுவது என்னும் பொழுது அதற்கான மசோதாதை இந்தச் சபையிலே நிறைவேற்ற